# அக்டோபர் – 20 – வெள்ளி

**எவரது குற்றம் மன்னிக்கப்பட்டதோ, எவரது பாவம் மறைக்கப்பட்டதோ, அவர் பேறு பெற்றவர். திபா. 32:1**

## முதல் வாசகம் : உரோமையர் 4 : 1 - 8

சகோதர சகோதரிகளே அப்படியானால், இதுகாறும் கூறியவை நம் இனத்தின் தந்தையாகிய ஆபிரகாமுக்கு எப்படிப் பொருந்தும்?தாம் செய்த செயல்களினால் அவர் கடவுளுக்கு ஏற்புடையவராகியிருந்தால், பெருமை பாராட்ட அவருக்கு இடமுண்டு ஆனால் கடவுள் முன்னிலையில் அவர் அப்படிப் பெருமை பாராட்ட இடமே இல்லை.ஏனெனில், மறைநூல் கூறுவதென்ன? ”ஆபிரகாம் கடவுள் மீது நம்பிக்கை கொண்டார் அதைக் கடவுள் அவருக்கு நீதியாகக் கருதினார்.”வேலை செய்தவர் பெறும் கூலி, நன்கொடையாகக் கருதப்படுவதில்லை அது அவர்கள் உரிமை.தம் செயல்கள்மீது நம்பிக்கை வையாது, இறைப்பற்றில்லாதோரையும் தமக்கு ஏற்புடையவராக்கும் கடவுள்மீது நம்பிக்கை வைப்போரை, அவரது நம்பிக்கையின் பொருட்டுக் கடவுள் தமக்கு ஏற்புடையோர் எனக் கருகிறார்.அவ்வாறே, கடவுள் ஒருவருடைய செயல்களைக் கணிக்காமலே, அவரைத் தமக்கு ஏற்புடையவர் எனக் கருதுவதால் அம்மனிதர் பேறுபெற்றவர் என்று தாவீது கூறியிருக்கிறார்”எவரது குற்றம் மன்னிக்கப்பட்டதோ, எவரது பாவம் மறைக்கப்பட்டதோ அவர் பேறுபெற்றவர்.ஆண்டவர் எந்த மனிதரின் தீச் செயலைக் கருத்தில் கொள்ளவில்லையோ அவர் பேறு பெற்றவர்.”

**பதில்பாடல் :** என் புகலிடமான ஆண்டவரே உம் மீட்பின்
ஆரவாரம் ஒலிக்கிறது

## நற்செய்தி : லூக்கா 12 : 1 - 7

அக்காலத்தில் ஒருவரையொருவர் மிதிக்கும் அளவுக்கு ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்திருந்தபோது இயேசு முதலில் தம் சீடரோடு பேசத் தொடங்கினார். அவர் அவர்களிடம் கூறியது: ”பரிசேயருடைய வெளிவேடமாகிய புளிப்பு மாவைக் குறித்து நீங்கள் எச்சரிக்கையாய் இருங்கள்.வெளிப்படாதவாறு மூடப்பட்டிருப்பது ஒன்றும் இல்லை அறியப்படாதவாறு மறைந்திருப்பதும் ஒன்றும் இல்லை.ஆகவே நீங்கள் இருளில் பேசியவை ஒளியில் கேட்கும். நீங்கள் உள்ளறைகளில் காதோடு காதாய்ப் பேசியவை வீடுகளின் மேல்தளத்திலிருந்து அறிவிக்கப்படும்.நண்பர்களாகிய உங்களுக்கு நான் சொல்கிறேன் உடலைக் கொல்வதையன்றி வேறு எதுவும் செய்ய இயலாதவர்களுக்கு அஞ்ச வேண்டாம்.நீங்கள் யாருக்கு அஞ்ச வேண்டுமென நான் உங்களுக்கு எடுத்துக் காட்டுகிறேன். கொன்றபின் நரகத்தில் தள்ள அதிகாரமுள்ளவருக்கே அஞ்சுங்கள் ஆம், அவருக்கே அஞ்சுங்கள் என நான் உங்களுக்குச் சொல்கிறேன். இரண்டு காசுக்கு ஐந்து சிட்டுக்குருவிகள் விற்பதில்லையா? எனினும் அவற்றில் ஒன்றையும் கடவுள் மறப்பதில்லையே.உங்கள் தலைமுடி எல்லாம் கூட எண்ணப்பட்டிருக்கின்றன. அஞ்சாதீர்கள் சிட்டுக்குருவிகள் பலவற்றை விட நீங்கள் மேலானவர்கள்‘‘ என்றார்.

**தியானம்:** இன்றைய நற்செய்தயில் கடவுளின் பரராமரிப்பு நமக்கு உணர்த்தப்படுகின்றது ஒரு மனிதனின் தலையில் இலட்சக் கணக்கான முடிகள் காணப்படுகின்றன, ஆனால் அதில் விழுகின்ற முடிகள் கூட கடவுளின் கண்களில் இருந்து தப்ப முடியாது என்றால், கடவுள் நம் மட்டில் எந்தளவு அன்பு வைத்திருக்கின்றார், எந்த அளவுக்கு நம்மை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுகின்றார், என்பது இங்கே தெளிவாக தெரிகின்றது. நம் அனைவருக்குமே ஒரு காவல் தூதர் தரப்பட்டிருக்கிறார். அந்த காவல் தூதரின் பிரசன்னம் கடவுள் நம்மட்டில் வைதிருக்கின்ற பராமரிப்பின் அளவைக் காட்டுவதாக இருக்கின்றது. இந்த உலகில் வாழுகின்ற எல்லா மனிதர்களின் வாழ்க்கையிலும் ஏதோ ஒரு பிரச்சனை இருந்து கொண்டு தான் இருக்கின்றது. இந்த பிரச்சனைகக்கு மற்றவர்களோ, அல்லது நாமோ காரணமாக இருக்கலாம். சிலவேளைகளில் பிரச்சனைக்கான காரணத்தையும் நாம் அறிய முடியாமல் இருக்கலாம், ஆனால் எல்லாச் சூழ்நிலைகளிலும் நாம் இயேசுவின் அன்பை மறந்துவிடக் கூடாது. அந்த பராமரிப்பின் நாம் வைத்திருக்கின்ற நம்பிக்கை தான் நமது பிரச்சனைகளிலிருந்து நாம் விடுதலை பெற உதவியாக இருக்கும். நமது பிரச்சனைகளுக்கு தீர்வு காண நமக்கு உதவி செய்யக் கூடியவர் நமது ஆண்டவர் அவரது பராமரிப்பில் முழுமையாக நம்பிக்கை வைப்போம் ஆமென்.